16.4.2015

தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## வேலூர் மாவட்டத்தில் பரவலாக மழை

வேலூர் மாவட்டத்தில் புதன்கிழமையும் பரவலாக மழை பெய்தது. பகலில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதால் கோடை வெயிலின் வெப்பத் தாக்கம் குறைந்து குளிர்ந்த காற்று வீசியது. புதன்கிழமை அதிகாலை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீட்டரில்): ஆற்காடு 69.4, ஆம்பூர் 6.6, வேலூர் 10.5, வாணியம்பாடி 3.2, காவேரிப்பாக்கம் 3, வாலாஜா 11.2, திருப்பத்தூர் 5.1.

## வீரிய ரக காய்கறிப் பயிர்கள் சாகுபடிக்கான தொழில்நுட்பங்கள்



காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்க வீரிய ரக காய்கறிப் பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் கை கொடுக்கும். எனவே, இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தினால் அதிக மகசூலை விவசாயிகள் பெறலாம் என்று காஞ்சிபுரம் மாவட்ட தோட்டக்கலைத் துறையின் இயக்குநர் கோல்டி பிரேமாவதி தெரிவித்தார். காய்கறிகள் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை நீக்கவல்லது. வைட்டமின்கள், தாது உப்புகளை கொண்டதோடு, மருத்துவக் குணங்களையும் அளிக்க வல்லதாகும். ஊட்டச்சத்துக்களை பெறுவதற்கு நாம் தினமும் 284 கிராம் காய்கறிகளை உண்ண வேண்டும். ஆனால் நாம் சராசரியாக 110 கிராம் அளவு

காய்கறிகளையே உண்கிறோம். ஆகவே, அவற்றின் உற்பத்தியைப் பெருக்க உடனடியாக வழிகாண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

**வீரிய ரக காய்கறி பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள்:**

**கத்தரிக்காய்:** ஜூன்-ஜூலை மாதங்களில் யு.எஸ். 172 ரவையா ரக கத்தரிக்காயும், டிசம்பர் - ஜனவரி மாதங்களில் உஜாலா, மஹிமா ஆகிய ரகங்களும் விதைக்க ஏற்றது. ஒரு ஹெக்டேருக்கு 200 கிராம் விதை போதுமானது. இதனால் ஒரு ஹெக்டேருக்கு 90-க்கு 60 செ.மீ. இடைவெளியில் 18,560 செடிகளை நடவு செய்யலாம். இதற்கு தொழு உரம் 25 டன் என்ற அளவில் நடவு செய்ய வேண்டும். மேலும், 440 கிலோ யூரியா, 900 கிலோ சூப்பர், 160 கிலோ பொட்டாஷ் ஆகிய அளவில் உரங்களைப் பயன்படுத்த வேண்டும். 150 நாள்களில் 25 ஆயிரம் கிலோ முதல் 35 ஆயிரம் கிலோ வரை மகசூல் பெற முடியும்.

**வெண்டைக்காய்:** ஜூன்-ஜூலை மாதங்களில் எம் 64, எம் 55 ஆகிய ரக வெண்டைக்காயும், அக்டோபர்-நவம்பர் மாதங்களில் நந்தினி ரகம், பிப்ரவரி-மார்ச் மாதங்களில் சக்தி, ஒ.செ.016 ஆகிய ரக வெண்டைக்காய் கல் விதைக்க ஏற்றது. ஒரு ஹெக்டேருக்கு 1.5 கிலோ விதை தேவைப் படும். இதனால் ஒரு ஹெக்டேருக்கு 60-க்கு 15 செ.மீ. இடைவெளியில் 1,11,110 செடிகளை நடவு செய்யலாம். இதற்கு தொழு உரம் 40 டன் என்ற அளவில் இட வேண்டும். மேலும் 440 கிலோ யூரியா, 600 கிலோ சூப்பர், 160 கிலோ பொட்டாஷ் ஆகிய அளவில் உரங்களை பயன்படுத்த வேண்டும். 90 நாள்களில் 15 ஆயிரம் கிலோ வரை மகசூல் பெற முடியும்.

**பாகற்காய்:** ஜூன் - ஜூலை மாதங்களில் விவேக், பச்சை ஆகிய ரக பாகற்காயும், டிசம்பர் - ஜனவரி மாதங்களில் நீளம், அபிஷேக் ஆகிய ரக பாகற்காயும் பயிரிட ஏற்றது. ஒரு ஹெக்டேருக்கு 1.8 கிலோ விதை தேவைப்படும். இதன் மூலம் ஒரு ஹெக்டேருக்கு 180-க்கு 60 செ.மீ. இடைவெளியில் 9,259 செடிகளை நடவு செய்யலாம். இதற்கு தொழு

உரம் 30 டன் என்ற அளவில் இட வேண்டும். மேலும் 440 கிலோ யூரியா, 625 கிலோ சூப்பர், 165 கிலோ பொட்டாஷ் ஆகிய அளவில் உரங்களை பயன்படுத்த வேண்டும். 115 முதல் 130 நாள்களில் ஒரு ஹெக்டேருக்கு 15 ஆயிரம் கிலோ வரை மகசூல் பெற முடியும்.

**சுரைக்காய்:** ஜூன் - ஜூலை, டிசம்பர் - ஜனவரி மாதங்களில் வரத் ஹைபிரிட் கௌரவ் பிரசாத், யு.எஸ். 12, 112 ஆகிய ரக சுரைக்காய் பயிரிட ஏற்றது. ஒரு ஹெக்டேருக்கு 1.8 கிலோ விதை தேவைப்படும். இதனால், ஒரு ஹெக்டேருக்கு 180-க்கு 60 செ.மீ. இடைவெளியில் 9,259 செடிகளை நடவு செய்யலாம். இதற்கு தொழு உரம் 30 டன் என்ற அளவில் இட வேண்டும். மேலும் 440 கிலோ யூரியா, 625 கிலோ சூப்பர், 165 கிலோ பொட்டாஷ் ஆகிய அளவில் உரங்களை பயன்படுத்த வேண்டும். 115 முதல் 130 நாள்களில் ஒரு ஹெக்டேருக்கு 40 ஆயிரம் கிலோ முதல் 45 ஆயிரம் கிலோ வரை மகசூல் பெற முடியும்.

**பீர்கன்காய்:** ஜூன் - ஜூலை, டிசம்பர் - ஜனவரி மாதங்களில் காவேரி, ராகினி, யு.எஸ். 6001 ஆகிய ரக பீர்க்கன்காய் பயிரிட ஏற்றது. ஒரு ஹெக்டேருக்கு 1.8 கிலோ விதை தேவைப்படும். இதன் மூலம் ஒரு ஹெக்டேருக்கு 180-க்கு 60 செ.மீ. இடைவெளியில் 9,259 செடிகளை நடவு செய்யலாம். இதற்கு தொழு உரம் 30 டன் என்ற அளவில் இட வேண்டும். மேலும் 540 கிலோ யூரியா, 625 கிலோ சூப்பர், 165 கிலோ பொட்டாஷ் ஆகிய அளவில் உரங்களை பயன்படுத்த வேண்டும். 105 முதல் 120 நாள்களில் ஒரு ஹெக்டேருக்கு 40 ஆயிரம் கிலோ முதல் 45 ஆயிரம் கிலோ வரை மகசூல் பெற முடியும் என்றார் அவர்.

# வறட்சியிலும் வற்றாத வெள்ளாமை: வழிகாட்டும் முன்னோடி விவசாயி ராஜா



பாழடைந்த கிணறுகளை மண் கொட்டி மூடிவிடாமல், பாதுகாத்து அதில் முறையாக மழை நீரைச் சேகரித்து வறட்சியிலும் வற்றாத வெள்ளாமைக்கு வழிகாட்ட முடியும் என்பதை நிரூபித்துக் காட்டி வருகிறார் வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டையை அடுத்த கீழ்பள்ளேரி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ராஜா. 44 வயதான அவர், தனது முப்பாட்டனார் விட்டுச் சென்ற 5 ஏக்கர் நிலத்தில் பல்வேறு பயிர்களை சாகுபடி செய்து, எளிய தொழில்நுட்பத்தைக் கையாண்டு முன்னோடி விவசாயி யாகத் திகழ்கிறார். பருவமழை பொய்த்த நிலையில், விவசாயம் செய்யப் போதிய தண்ணீர் இல்லை, வேளாண் பணிக்கு ஆள்கள் கிடைப்பதில்லை, இடுபொருள்களின் விலையேற்றம், விளை பொருள்களுக்கு கட்டுபடியான விலை கிடைப்பதில்லை போன்ற காரணங்களால் சாகுபடித் தொழிலைக் கைவிட்டு வேறு தொழிலுக்கு மாறி வருகின்றனர் விவசாயிகள். இந்த இக்கட்டான சூழ்நிலையில் ராஜாவை போன்ற விவசாயிகள் சிலர் விவசாயத் தொழிலைக் கைவிடாமல் எளிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியில் சாதனை படைத்து வருகின்றனர். இதுகுறித்த தனது அனுபவங்களை விவசாயி ராஜா, எமது செய்தியாளரிடம் கூறியது: மாநில அளவில் வெயிலுக்கு பேர் போன வேலூருக்கு அருகில் ஆந்திர மாநில எல்லையில், பொன்னை ஆற்றுப் பாசனத்தின் கீழ் உள்ள பள்ளேரி எனது சொந்தக் கிராமம். இங்கு எனது மூதாதையர் விட்டுச் சென்ற சுமார் 5 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தைச் சுற்றி கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பொட்டல் காடுதான். விவசாய நிலங்களில் நிலத்தடி

நீர் மட்டம் சுமார் 300 அடி ஆழம் வரை சென்று விட்டது. நீராதாரம் இன்றி வானம் பார்த்த பூமியாக உள்ள விளை நிலங்களை ஏராளம்.

ஆனால் எங்களுக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலத்தின் மத்தியில் எங்கள் முப்பாட்டனார் காலத்தில் வெட்டிய 60 அடி ஆழ வட்டக் கிணற்றில் இந்த கோடை வறட்சியிலும் சுமார் 18 அடி ஆழத்திலேயே தண்ணீர் உள்ளது. இங்குள்ள எனது 5 ஏக்கர் நிலத்தையும், ஒரு சென்ட் கூட தரிசாக வைக்காமல் ஆண்டு முழுவதும் பலவகை பயிர்களுடன் ஊடுபயிர்களை யும் சேர்த்து, சாகுபடி செய்து நிறைவான வருவாய் ஈட்டி வருகிறோம். 5 ஏக்கர் நிலத்தில் ஒரு ஏக்கர் பந்தல் பாகல், ஒரு ஏக்கர் செடி முருங்கை அதில் ஊடு பயிராக பப்பாளி, மல்லி, 1.40 ஏக்கரில் மா, அதில் ஊடு பயிராக பச்சை மிளகாய், அகத்தி, 60 சென்ட் ராகி, ஒரு ஏக்கர் நெல் எனவும், வரப்பு ஓரங்களில் தென்னை, கிணற்றைச் சுற்றி மூலிகைகள், மாடுகளுக்கு தீவனம் என இயற்கை வழியில் விவசாயம் செய்து வருகிறேன். இங்கு விளையும் அனைத்துக் காய்கறிகளும் காட்பாடி உழவர் சந்தை, ராணிப்பேட்டை வாரச் சந்தைக்கு அனுப்பி வைக்கிறோம். மேலும் நிலத்திற்கே நேரடியாக வந்தும் வாங்கிச் செல்கின்றனர். எந்தக் காரணத்தைக் கொண்டும் கோயம்பேடு மொத்த காய்கறிச் சந்தைக்கு அனுப்புவது இல்லை, ஏனென்றால் விவசாயிகளின் விளைபொருள்கள் கிலோ ரூ.10-க்கு விலை விற்றாலும் ரூ.10 தரகுத் தொகை தர வேண்டும், அதே விளைபொருள் ரூ.100-க்கு விற்றாலும் ரூ.10 தரகுத் தொகைத் தர வேண்டும். இது போன்ற பகல் கொள்ளை உழவர் சந்தையிலும், வாரச் சந்தையிலும் இல்லை. இங்கு தரத்திற்கேற்ற விலை, எடைக்கு ஏற்ற பணம், நிம்மதியான வியாபாரம். விவசாயம் செய்ய தண்ணீர் அவசியம். ஆனால் அந்தத் தண்ணீரை மனிதனால் உற்பத்தி செய்ய முடியாது. அது இயற்கை தரும் கொடை. அத்தகைய மழைநீரை ஒரு சொட்டுக்கூட வீணாக்காமல் நமது நிலத்தில் உள்ள பாழடைந்து பயன்பாடு இல்லாமல் இருக்கும் பாசன கிணற்றில் சேகரித்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி ஆண்டு முழுவதும் பயிர் செய்யத்

தேவையான தண்ணீரைப் பெறலாம். இந்த எளிமையான தொழில் நுட்பத்தை குறைந்த செலவில் விவசாயிகளே செய்து ஆண்டு முழுவதும் தண்ணீர்ப் பற்றாக்குறை இன்றி சாகுபடி செய்து பணம் ஈட்டலாம். அதேபோல் பழைய விவசாயக் கருவிகளான ஏர்க் கலப்பை, பரம்பு, மண்வெட்டி, அரிவாள் உள்ளிட்டக் கருவிகளை முன்னோர்களின் நினைவாக வீட்டில் வைத்துவிட்டு, நவீன விவசாயக் கருவிகளைப் பயன்படுத்தி இயற்கை முறையில் விவசாயம் செய்ய முன்வர வேண்டும். மேலும் விவசாய வேலைக்கு ஆள்கள் வருவதில்லை எனக் கூறுகிறார்கள். ஆனால் எனது விவசாய நிலத்தில் ஆண்டு முழுவதும் வேலைக்கு ஆள் வருகிறார்கள். இந்த ஆண்டு மட்டும் சுமார் 800 ஆள்கள் வேலை செய்துள்ளனர். வேலை முடிந்தவுடன் அவர்களுக்கான அன்றைய ஊதியத்தை உடனே வழங்குங்கள், கண்டிப்பாக வேலைக்கு ஆள்கள் கிடைப்பார்கள். இதுபோன்ற சின்ன, சின்ன மாற்றங்களை செய்து பாருங்கள், விவசாயம் எளிதான தொழிலாக, லாபகரமான தொழிலாக, அனைவரின் பசியைப் போக்கும் உன்னதமான தொழிலாக மாறிவிடும். இதை கைவிட்டுச் செல்லாதீர்கள் என்றார் ராஜா. விவசாயி ராஜா 5-ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர். திருமணமாகி மனைவி, மகன், மகளுடன் வசிக்கிறார். தனது பிள்ளைகள் இருவரையும் வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் எம்.டெக். படிக்க வைத்து வருகிறார். வருங்காலத்தில் அவர்களையும் விவசாயத்தில் ஈடுபட வைக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார் ராஜா. அவரது தொடர்பு எண்: 9245150084.

## ஒழுங்குமுறை விற்பனையில் 228 குவிண்டால் பருத்தி ரூ. 8.75 லட்சத்துக்கு ஏலம்

பெரம்பலூர் அருகே எளம்பலூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை நடைபெற்ற மறைமுக ஏலத்தில் 228 குவிண்டால் பருத்தி ரூ. 8.75 லட்சத்துக்கு விற்பனையானது. இந்திய பருத்திக்

கழகத்தின் மூலம் நடைபெற்ற மறைமுக ஏலத்தில் 55 விவசாயிகள் தங்களது 228 குவிண்டால் (651 மூட்டை) பருத்தியை விற்பனைக்காக கொண்டு வந்தனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த வியாபாரிகள், பருத்தியின் தரத்தை சோதித்து அதற்கான விலையை அலுவலர்களிடம் தெரிவித்தனர். நீண்ட இழை பருத்தி ஒரு குவிண்டால் ரூ. 3,259 முதல் ரூ. 4,141-க்கும், மிக நீண்ட இழை பருத்தி குவிண்டால் ரூ. 4,069 முதல் ரூ. 4,209-க்கும் என, 228 குவிண்டால் பருத்தி ரூ. 8.75 லட்சத்துக்கு விற்பனையானது.இந்த ஏல விற்பனையை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார்.

## திருவாரூரில் 26.6 மி.மீ. மழை

திருவாரூரில் செவ்வாய்க்கிழமை 26.6 மில்லி மீட்டர் மழை பெய்தது.

மாவட்டத்தில் கடந்த இரு நாள்களாக பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. இதனால் சுட்டெரிக்கும் வெயில் தாக்கம் சற்று குறைந்து, குளிர்ந்த சூழ்நிலை நிலவி வருகிறது. செவ்வாய்க்கிழமை மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் மழைப் பெய்தது. இதனால் பொதுமக்கள், கால்நடை விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர். மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு மி.மீ. வருமாறு: திருவாரூர் - 26.6, பாண்டவையாறு தலைப்பு - 7, முத்துப்பேட்டை - 3.6, திருத்துறைப்பூண்டி - 3.4, மன்னார்குடி - 2, குடவாசல் - 1.8, வலங்கைமான் -1 என்ற அளவில் மழைப் பெய்தது. புதன்கிழமை சிறிது நேரம் மழை பெய்தது, நாள் முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

## கர்நாடகத்தில் பரவலாக மழை வாய்ப்பு

அடுத்த 5 நாள்களுக்கு கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பெங்களூரு வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

பெங்களூரு உள்பட கர்நாடகத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடந்த 5 நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. கர்நாடகத்தின் தென் பகுதியின் பெரும்பாலான இடங்கள், வட கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளில் புதன்கிழமை மழைபெய்தது. கடலோர கர்நாடகத்தில் வறண்ட வானிலை நிலவியது. கடந்த 24 மணி நேரத்தில் சாமராஜ்நகர் மற்றும் கோலார் மாவட்டங்களில் பரவலாக மழை பெயத்து. சீனிவாஸ்புராவில் அதிகபட்சமாக 50 மி.மீட்டரும், பண்டிபூர், ஆனேக்கலில் தலா 40 மி.மீட்டரும், சாமராஜ்நகர், மத்தூரில் தலா 30 மி.மீட்டரும், மஸ்கி, ராயல்படு, கோலார் தங்கவயல், சிட்லகட்டாவில் தலா 20 மி.மீட்டர் மழையும் பதிவாகின. பெங்களூரு வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.எம்.மேத்ரி கூறியது: வடக்கு, தெற்கு கர்நாடகத்தில் பரவலாக பலத்த மழை பெய்தது. கடலோர கர்நாடகத்தில் வறண்ட வானிலை காணப்பட்டது. வருகிற 20-ஆம் தேதி கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் தென் கர்நாடகத்தின் உள்பகுதியில் பரவலாகவும், வட கர்நாடகம் மற்றும் கடலோர கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளில் இடியுடன் கூடிய மழையும்பெய்யும். அடுத்த 48 மணி நேரத்தில் தென்கர்நாடகத்தில் பரவலாக, கடலோர கர்நாடகம் மற்றும் வட கர்நாடகத்தின் உள்பகுதியின் ஒருசில பகுதிகளில் மிதமானது முதல் பலமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது. அடுத்த 48 மணி நேரத்தில் பெங்களூருவில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். தட்பவெப்பம் அதிகபட்சமாக 30 டிகிரி செல்சியஸ், குறைந்தப்பட்சமாக 20 டிகிரி செல்சியஸாக இருக்கும் என்றார்.

**<u>பால் உற்பத்தியை அதிகரிக்க இந்தியாவுக்கு இஸ்ரேல் உதவி</u>**

இந்தியாவில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஹரியாணா மாநிலத்தில் ஒரு சிறப்பு மையத்தை தொடங்குவதற்காக இஸ்ரேல் நாடு ரூ.15 கோடியை முதலீடு செய்துள்ளது. இதுதொடர்பாக ஹரியாணா

மாநில அரசுக்கும், "மஷாவ்' எனப்படும் இஸ்ரேல் நாட்டின் சர்வதேச வளர்ச்சி நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் புதன்கிழமை கையெழுத்தானது. இந்த மையம், இஸ்ரேல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் இந்தியாவில் பால் வளத் துறையில் உற்பத்தியை உயர்த்துவது தொடர்பான பயிற்சியை ஹரியாணா விவசாயிகளுக்கு அளிக்கும். வேளாண்மை ஒத்துழைப்புக்காக இந்திய-இஸ்ரேல் நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதிதான் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும். இதுகுறித்து ஹரியாணா மாநில வேளாண் துறை அமைச்சர் ஓ.பி.தன்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஹரியாணா மாநிலத்தில் பால் உற்பத்தியை இஸ்ரேல் நாட்டு தொழில்நுட்ப உதவியுடன் அதிகரிக்கப்பது அரசின் குறிக்கோளாகும். இதன்மூலம் நமது நாட்டில் பால் உற்பத்தியில் ஹரியாணா முதன்மை மாநிலமாக திகழும் என்று ஓ.பி.தன்கர் தெரிவித்தார். இத்திட்டத்தின் இஸ்ரேல் நாட்டு துணைத் தலைவர் யாஹெல் விலான் கூறிகையில், "ஹரியாணாவில் தோட்டக்கலை சிறப்பு மையம் ஒன்றை நாங்கள் அமைத்துள்ளோம். அதேபோல் பால் வளத் துறை மையமும் ஏற்படுத்தப்படும்' என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தமிழகம் முழுவதும் பரவலாக மழை</u>**

சென்னை: தமிழகம் முழுவதும் கோடை வெயில் அதிகரிக்க துவங்கிய நிலையில் மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. சென்னையில் பெய்த கனமழை காரணமாக மீனம்பாக்கம் விமானநிலையத்திற்குள் தண்ணீர் புகுந்தது. மேலும் மாம்பலம், காசிமேடு, மேடவாக்கம், ராயபுரம் பகுதிகளிலும் பெய்தமழை காரணமாக தாழ்வான பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கிநின்றது. மாநிலத்தின் பிற பகுதிகளான விழுப்புரம் மாவட்டம் முழுவதும் மழை பெய்தது. தேனி மாவட்டத்தின் கம்பம்,

லோயர்கேம்ப்,குமுளி பகுதிகளில் மழை பெய்துள்ளது. நாமக்கல், ராசிபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலும் கனமழை பெய்துள்ளது.

## பொன் ஏர் பூட்டி விவசாயம் துவக்கம்

காஞ்சிபுரம்: விவசாயம் நல்ல முறையில் நடைபெற, முன்னோர்கள் நடைமுறையான 'பொன் ஏர் பூட்டும் விழா' குருவிமலை பகுதியில் நேற்று நடந்தது. காஞ்சிபுரம் அடுத்த, குருவிமலை பகுதியில், விவசாயிகள் தங்கள் நிலத்தில், விவசாயம் செய்வதற்கு முன், இந்து முறைப்படி, தேங்காய், வெற்றிலை பாக்கு, பழம் வைத்து பூஜை செய்து, மாட்டிற்கு மஞ்சள் குங்குமம் இட்டு, ஆரத்தி காட்டி, பச்சரிசி வெல்லம் கலந்து மாட்டுக்கு கொடுப்பார்கள். அதன் பின், உழவுப்பணியை தொடங்குவார் கள். இதற்கு 'பொன் ஏர் பூட்டுதல்' என்று பெயர். இந்த பூஜைகளை, விவசாயிகள் தொன்றுதொட்டு செய்து வந்தனர். தற்போது பழைய சடங்கு முறையை புதுப்பிக்கும் வகையில், நேற்று, அனைத்து விவசாய சாகுபடி பயிர்கள் உற்பத்தி சங்கம் சார்பில், இந்த நிகழ்வை விவசாயிகளுக்கும் தற்போது உள்ள தலைமுறைகள் தெரிந்து கொள்ளவும், இந்த 'பொன் ஏர் பூட்டும் விழா' நடந்தது.

## தொடரும் கன மழையால் ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து: விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி சுற்று வட்டார பகுதியில் தொடர்ந்து, மூன்று நாட்களாக கன மழை பெய்ததால், ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து தொடங்கியது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சில நாட்களாக வெயில் சுட்டெரித்து வந்தது. அக்னி நட்சத்திரம் தொடங்கும் முன்பாகவே, கடும் வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்தது. இரவு நேரங்களில் தூங்க முடியாமல் தவித்து வந்தனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக மாலை நேரத்தில் பரவலாக கன

மழை பெய்தது. நேற்று காலை நிலவரப்படி மாவட்டத்தில் அதிக பட்சமாக நெடுங்கல்லில், 35.2 மி.மீ., ஓசூர், 15 மி.மீ., கிருஷ்ணகிரி, 13.2 மி.மீ, சூளகிரி, 9 மி.மீ., ராயக்கோட்டை, 7 மி.மீ., போச்சம்பள்ளி, 5.6 மி.மீ., தேன்கனிக்கோட்டை, 5 மி.மீ., பாரூர், 3.2 மி.மீ., பெணுகொண்டா புரம், 3.2 மி.மீ., அஞ்செட்டி, 2 மி.மீ., மழை பதிவானது. நெடுங்கல் சுற்றுவட்டார பகுதியில், தொடர்ந்து மூன்று நாட்களாக இரவில் கன மழை பெய்வதால், அப்பகுதியில் வறண்டிருந்த ஏரிகளுக்கு தண்ணீர வரத்து தொடங்கியுள்ளதால், அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியில் காணப்படுகின்றனர்.

## வேதாரண்யத்தில் மழை

வேதாரண்யம்: வேதாரண்யம் வட்டாரத்தில் கடந்த, 3 மாதங்களுக்கு மேலாக கோடை வெயில் தாக்கம் அதிகம் இருந்தது. இந்நிலையில், நேற்று காலை மழை பெய்தது. வேதாரண்யம் வட்டாரத்தில் ஆதனூர், நெய்விளக்கு, கருப்பம்புலம், குரவப்புலம், தலைஞாயிறு, மணக்குடி, காடந்தேத்தி, வாய்மேடு, கரியாப்பட்டினம் செம்போடை உள்ளிட்ட பகுதியில் அதிகாலையிலிருந்து மழை பெய்தது. அறுவடைக்கு பின் உளுந்து, பயறு, எள் போன்றவற்றை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். இந்த கோடை மழை அதற்கு பயனாக அமைந்துள்ளது. கடந்த, மூன்று மாதங்களாக கோடையின் தாக்கத்தால் ஆவதிபட்டு வந்த மக்கள் இந்த மழையால் மகிழ்ச்சியடைந்தனர்.

## திருச்சி மாவட்டத்தில் 2 நாட்களாக மழை

திருச்சி: திருச்சி மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவும் மழை பெய்தது. திருச்சி மாவட்டத்தில், கடந்த மூன்று நாட்களுக்கு முன் இரவில் திடீரென கோடை மழை பெய்தது. நேற்று முன்தினம் இரவும் இடியுடன், மழை பெய்தது. நேற்று காலை நிலவரப்படி மணப்பாறையில், 20.80 மி.மீ.,

தேவிமங்கலத்தில், 16 மி.மீ., சிறுகுடியில், 27 மி.மீ., புலிவலத்தில், 20 மி.மீ., மழை பெய்துள்ளது. மற்ற இடங்களில் லேசான தூறல் மழை பெய்துள்ளது. மாவட்டம் முழுவதும், 154.80 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை: ""சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில், ஏப்ரல் 24 அன்று காலை 11 மணிக்கு, விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் முனுசாமி தலைமையில் நடக்கும். அன்றைய தினம் விவசாயிகள், பொதுமக்கள் விவசாயம் சார்ந்த புகார்களை தெரிவிக்கலாம்," என கலெக்டர் பி.ஏ., (விவசாயம்) சுதர்சன் தெரிவித்தார்.

## துவங்கியது பதனீர் சீசன் குறைகிறது கருப்பட்டி விலை

ஸ்ரீவில்லிபுத்தூர்: பதனீர் சீசன் துவங்கி உள்ளதால் கருப்பட்டி விலையும் குறைந்து வருகிறது. தமிழ் மாதங்களான சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் பதனீர் சீசன் ஆரம்பமாகும். இக்காலங்களில் கருப்பட்டி உற்பத்தி அதிகரிக்கும். உற்பத்தி செய்யப்படும் கருப்பட்டிகள் அடுத்த சீசன் துவங்கும் வரை இருப்பு வைக்கப்பட்டு விற்கப்படும். தற்போது சீசன் துவங்கியுள்ளதால் இதுன் விலை குறையத்துவங்கியுள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு வரை கிலோ ரூ.260 வரை விற்ற கருப்பட்டி யின் விலை தற்போது மொத்த விற்பனைக்கடைகளில் ரூ.140 , சில்லரை கடைகளில் ரூ.170 வரை விற்கப்படுகிறது.இந்த விலை வைகாசி வரை நீடிக்க வாய்ப்புள்ளது.அதன்பின் படிப்படியாக அதிகரிக்கும். கருப்பட்டி யை பொறுத்தவரை கடலோர செம்மண் பகுதியிலுள்ள பனை மரங் களிலிருந்து காய்ச்சப்படும் கருப்பட்டிகள் தரம் நன்றாக இருப்பதால் விலை அதிகமாக இருக்கும்.இதனால் தான் உடன்குடி, சாத்தான்குளம், திசையன்விளை கருப்பட்டிகளின் விலை அதிகமாக உள்ளது. விளாத்திகுளம் அருகே வேம்பார் , ஸ்ரீவில்லிபுத்தூர் மம்சாபுரம், ராயகிரி பகுதிகளிலும் கருப்பட்டி உற்பத்தி அதிகரிக்கத்துவங்கி உள்ளது.

கருப்பட்டி விற்பனையை பொறுத்த வரை திருநெல்வேலி, தூத்துக்குடி,கன்னியாகுமரி மாவட்டங்களில் அதிகம் . இப்பகுதி மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் கருப்பட்டியை அதிகம் பயன்படுத்துகின்றனர். இதனால் விருதுநகர் மாவட்டத்தில் உற்பத்தியாகும் கருப்பட்டிகளும் அதிகளவில் தென்மாவட்டங்களுக்கு அனுப்பபடுகிறது.

**தினகரன்**

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>தமிழகத்தில் மழை தொடரும்</u>

சென்னை : தமிழகத்தில் தொடர்ந்து நிலவும் வறண்ட வானிலை காரணமாக வெப்ப சலனம் ஏற்பட்டு வளி மண்டல மேல் அடுக்கில் நேற்று முன்தினம் காற்று சுழற்சி ஏற்பட்டது. இதனால் தமிழகத்தில் நேற்று பரலாக மழை பெய்தது. சென்னையில் நேற்று காலையில் இருந்தே பரவலாக தாம்பரம், பூந்தமல்லி, சைதாப்பேட்டை, அடையார், திருவான்மியூர், வட சென்னை உள்ளிட்ட பல இடங்களில் மழை கொட்டித் தீர்த்தது. இதனால் சென்னை நகரின் பெரும்பாலான சாலைகளில் மழை நீர் தேங்கியது. இதனால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. இரு சக்கர வாகனங்களில் சென்றவர்கள் பெரும் அவதிப்பட்டனர்.மேலும், வளி மண்டல காற்று சுழற்சி தொடர்ந்து நீடிப்பதால் இன்றும் தமிழகத்தில் பரலாக மழை பெய்யும். உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது. சென்னையில் சில இடங்களில் மிதமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

## <u>2.40 கோடிக்கு தேயிலை விற்பனை</u>

கோவை: கோவை தேயிலை ஏல மையத்தில் நேற்று நடந்த ஏலத்தில் உள்ளூர் ரகம் (டஸ்ட்) 2.22 லட்சம் கிலோ 1.75 கோடிக்கும். ஏற்றுமதி

ரகம் 86 ஆயிரம் கிலோ 65 லட்சத்துக்கும் விற்பனையானது. கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் உள்ளூர் ரகம் கிலோவுக்கு 2.09 குறைந்தது. ஏற்றுமதி ரகம் 6 பைசா அதிகரித்துள்ளது.

## கடலூர் மாவட்டத்தில் கோடை மழை

கடலூர்:கடலூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக விட்டு விட்டுப் பெய்து வரும் கோடைமழையால் வெப்பத்தின் தன்மை குறைந்துள்ளது. கச்சத்தீவு பகுதியில் ஏற்பட்டுள்ள சுழற்சி காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கடலூர் மாவட்டத்தில் சுட்டெரித்து வந்த கோடை வெயிலின் தாக்கம் கடந்த 2 நாட்களாக ஆங்காங்கே பெய்து வரும் மழையின் காரணமாக குறைந்துள்ளது. நேற்று வானம் மேகமூட்டத் துடன் இருந்ததால் மேலும் மழை பெய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கடலூர் பகுதியில் இரவு நேரங்களில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இதனால் குண்டும் குழியுமான சாலைகளில் மழை நீர் நிரம்பி வாகன ஓட்டிகளை திணற வைத்துள்ளது. கோடை மழை விவசாயி களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.கடலூர் மாவட்டத்தில் கடலூர், பண்ருட்டி சேத்தியாத்தோப்பு உள்ளிட்ட பகுதிகளிலும் விட்டு விட்டு மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சிதம்பரம்: சிதம்பரம் மற்றும் சுற்றுபுற பகுதிகளில் கடந்த சில வாரங்களாக கோடை வெயில் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் நீர் நிலைகள் வற்ற தொடங்கின. நிலத்தடி நீரும் வெகுவாக குறைந்து வந்தது. இதற்கிடையே கடந்த இரு தினங்களாக சிதம்பரம் பகுதியில் அவ்வப்போது லேசாக மழை பெய்து வருகிறது. நேற்று சிதம்பரத்தில் அதிகாலையில் மழை பெய்ய தொடங்கியது. பின்னர் விட்டு விட்டு மழை பெய்ததால் கோடை வெப்பத்தினால் ஏற்பட்ட புழுக்கத்தில் சிக்கி தவித்த மக்கள் குளிர்ச்சியை அனுபவித்தனர்.மழையினால் சிதம்பரம் நகரில் கீழசன்னதி, மேலவீதி, வடக்குவீதி, தங்கரதசந்து உள்ளிட்ட

தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. மாலையில் மழைவிட்டு வெயில் அடிக்க தொடங்கியது.

## கல்வராயன்மலையில் தொடர் கனமழை: கோமுகி அணையின் நீர்மட்டம் 26அடி உயர்வு

சின்னசேலம்: கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள கோமுகி அணையில் கடந்த நவம்பர் மாதம் 44 அடி நீர் தேக்கி வைக்கப்பட்டு, நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. பிறகு அணையின் நீர்மட்டம் 25 அடியாக குறைந்ததால், மீன் வளர்ப்பிற்கு வேண்டி அணை மூடப்பட்டது. தற்போது அணையில் 23 அடியாக இருந்தது.இந்நிலையில் கடந்த 3 நாட்களாக கல்வராயன் மலை பகுதியில், இரவு நேரங்களில் கன மழை பெய்தது. இதன் பலனாக அணைக்கு வினாடிக்கு 1000 கனஅடி நீர்வரத்து இருந்தது. அதன்பிறகு படிப்படியாக குறைந்து தற்போது 100 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் அணையின் நீர்மட்டமும் 23 அடியிலிருந்து 26 அடியாக உயர்ந்தது. அதுமட்டுமல்லாமல் கோமுகி ஆற்றிலும் காட்டாற்று வெள்ளம் பாய்ந்து தண்ணீர் ஓடுகிறது. இதனால் ஆற்றின் கரையோரம் உள்ள கிணறுகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது. இதனால் கச்சிராயபாளையம், வடக்கநந்தல், அக்கராயபாளையம், ஏர்வாய்பட்டிணம் உள்ளிட்ட கிராமங்களில் வறட்சி நீங்கியதுடன் குடிநீர் பஞ்சமும் தீர்ந்தது.மேலும் மழைக்கு முன்னதாக வீசிய சூறாவளி காற்றின் பாதிப்பு காரணமாக பொட்டியம், மாயம்பாடி, பரங்கிநத்தம், மாயம்பாடி உள்ளிட்ட கிராமங்களில் சுமார் ஒரு லட்சம் மதிப்புள்ள வாழை மரங்கள் சாய்ந்தது. இந்த தொடர் மழையால் கோமுகி அணையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சிய டைந்துள்ளனர்.

## பாதிரிப்பட்டியில் பண்ணை பள்ளி பயிற்சி முகாம்

தோகைமலை: தோகைமலை பகுதி பாதிரிப்பட்டியில் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சிமையம் சார்பில் பண்ணைப் பள்ளி பயிற்சி முகாம் நடந்தது.கரூர் மாவட்டம், தோகைமலை ஒன்றியம், பாதிரிப்பட்டியில் சிநேகிதி மகளிர் குழுவினைச் சேர்ந்த 25 மகளிர்க்கு பண்டுதகாரன் புதூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சிமையம் சார்பில் பண்ணைப்பள்ளி பயிற்சி முகாம் நடந்தது. இப்பயிற்சி முகாமினை பாதிரிப்பட்டி தலைவர் ரங்கர் தலைமை வகித்து துவக்கி வைத்து பேசினார். சிநேகிதி நிறுவன பகுதி ஒருங்கிணைப்பாளர் சித்ரா வரவேற்றார். இதில் சிநேகிதி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சத்யா பண்ணைப்பள்ளி பயிற்சி குறித்து பேசினார்.முகாமில் கால்நடை பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் அகிலா அறிவியல் சார்ந்த முறையில் கால்நடைவளர்ப்பு, கலப்பு தீவனம், பசுந்தீவனம், வைக்கோல் மற்றும் தீவனதட்டு, மேய்ச்சல்தீவனம், தாதுஉப்பு கலவை, இனப்பெருக்க பராமரிப்பு, கால்நடைகளின் உடல்நலன் மற்றும் நோய்த்தடுப்பு முறைகள் ஆகியவைக் குறித்து விரிவாக பயிற்சி அளித்தார். பண்ணைப்பள்ளியின் சிறப்பு அம்சமாக வெயில் காலத்தில் பசும்தீவனம் சேமித்தல், ஊறுகாய் புல் தயாரித்தல் பற்றிய செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. சிநேகிதி நாபின்திட்ட மேலாளர் வடிவேல் நன்றி கூறினார்.

## புதுக்கோட்டையில் 592.40 மி.மீ மழை

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் 592.40 மி.மீட்டர் மழை பதிவாகி உள்ளது.புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று இரவு அதிகபட்ச மாக நாகுடியில் 86 மிமீ, குறைந்த பட்சமாக உடையாளிப் பட்டியில் 1 மிமீ மழையும் பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:புதுக்கோட்டை 18, ஆலங்குடி 11.20, அறந்தாங்கி 50, கீரனூர் 11, அரிமளம் 32, திருமயம்

40.20, விராலிமலை 20, ஆயிங்குடி 20.40, நாகுடி 86, கட்டுமாவடி 71, ஆவுடையார்கோவில் 52, பெருங்குளூர் 3, இலுப்பூர் 4, ஆதனக்கோட்டை 3, உடையாளிப்பட்டி 1, மீமிசல் 56.60, மணமேல்குடி 60, அன்னவாசல் 5, குடுமியான்மலை 8, கீழ்நிலை 40, என மொத்தம் மாவட்டத்தில் 592.40 மிமீ மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் சராசரியாக 23.70 மிமீ மழை பெய்துள்ளது.

## <u>பாபநாசம் பகுதி விவசாயிகளுக்கு தஞ்சையில் புத்தாக்க பயிற்சி</u>

பாபநாசம்: பாபநாசம் பகுதி விவசாயிகளுக்கு தஞ்சை கால்நடை மருத்துவ பல்கலை ஆராய்ச்சி மையத்தில் புத்தாக்க பயிற்சி அளிக்கப் பட்டது.தமிழ் நாடு கால் நடை பராமரிப்புத் துறை, விவசாயத் துறை சார்பில் பாபநாசம் வட்டாரத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி கள் 10 பேருக்கு தஞ்சை கால்நடை மருத்துவப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மையத்தில் ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி தரப் பட்டது. பயிற்சி யில் கால் நடை வளர்ப்பில் மூலிகை மருத்துவம் பற்றி விளக்கப் பட்டது. பயிற்சி மையப் பேராசிரியர் நித்திய செல்வி பயிற்சியளித்தார். ஏற்பாடுகளை கபிஸ்தலம் கால் நடை உதவி மருத்துவர் வடிவேலன் செய்திருந்தார். விவசாயத் துறையைச் சேர்ந்த ஜெயபிரபா, வடிவேலன் இதில் கலந்து கொண்டனர்.

## <u>கொப்பரை கொள்முதலை மீண்டும் தொடங்கவேண்டும்</u>

சேதுபாவாசத்திரம்: சேதுபாவாசத்திரம் பகுதியில் கொப்பரை கொள் முதலை மீண்டும் தொடரவேண்டும் என்று நேர்காணல் முகாமில் கோ ரிக்கை விடுக்கப்பட்டது. சேதுபாவாசத்திரம் அருகே மக்கள் நேர்காணல் முகாம் நடைபெற்றது. முகாமில் கொப்பரை கொள்முதல் தொடர வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது.சேதுபாவாசத்திரம் அருகேயுள்ள மரக்காவலசை ஊராட்சி துறையூரில் நேற்று மக்கள் நே ர்காணல் முகாம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர்

சந்திரசேகரன் தலைமை வகித்தார். பட்டுக்கோட்டை கோட் டாட்சியர் அரங்கநாதன் முன்னிலை வகித்தார். மரக்காவலசை ஊராட்சி தலைவர் தேவேந்திரன் வரவேற்றார். முகாமில் தஞ் சை மாவட்ட திமுக விவசாய அணி துணை அமைப்பாளர் பொன்.பாலசுப்பிரமணியன் பேசும் போது: தஞ்சை மாவட்டத்தின் கடைகோடி சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியாகும். குறிப்பாக துறையூர் பகுதிகளில் உள்ள ஏரி குளங்கள் தூர் வாரப்பட்டு பல வருடங்களாகிறது. இதனால் இங்கு இயற்கையாகவே தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. மழையும் மிக குறைவான அளவே பெய்துள்ளது.

## சங்கரன்கோவில் பகுதிகளில் 3வது நாளாக திடீர் கனமழை சாலைகளில் வெள்ளம்; மக்கள் மகிழ்ச்சி

சங்கரன்கோவில்: சங்கரன்கோவில் பகுதிகளில் 3வது நாளாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் சாலைகளில் வெள்ளம் ஓடுகிறது. இதனால், மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.நெல்லை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக அக்னி வெயிலை மிஞ்சுகின்ற வகையில் வெயில் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இதனால் இம்முறை அக்னி நட்சத்திர வெயிலை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்ற அச்சம் அனைத்து மக்களின் மனதிலும் எழ ஆரம்பித்தது. இந்நிலையில் கடந்த சில தினங்களாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கோடை மழை பெய்து வருகிறது. சங்கரன்கோவில் மற்றும் சுற்றுப் புறப்பகுதிகளில் கடந்த 3 நாட்களாக மாலை நேரங்களில் பலத்த இடி மின்னல், காற்றுடன் கனமழை பெய்து வருகிறது. இதனால் கோடை வெப்பத்தின் தாக்கம் குறைந்து, இப்பகுதியில் குளுகுளு காற்று வீசி வருகிறது. 3ம் நாளான நேற்று மாலை 6.30 மணிக்கு துவங்கிய கனமழை சுமார் ஒருமணி நேரத்திற்கு மேலாக நீடித்தது.இந்த மழையால் நகரின் முக்கிய சாலைகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடியது. குறிப்பாக தெற்குரதவீதி சாலை மற்றும் ஓடைத் தெருவில் சுமார் 2 அடி உயரத்திற்கு

தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. கோடை வெயிலின் தாக்கத்தை தணிக்கின்ற வகையில் தொடர்ந்து இப்பகுதியில் பெய்து வரும் மழையால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>தமிழகத்தில் கனமழை பெய்யும் வானிலை ஆராய்ச்சி மையம் தகவல்</u>



சென்னை, லட்சத்தீவு கடல் பகுதியில் மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

கோடைமழை

தமிழகத்தில் கோடை வெயில் வறுத்து எடுத்து வந்த நிலையில், கடந்த சில நாட்களாக பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. இது கோடை வெயிலில் தவித்த மக்களின் உடல் மற்றும் உள்ளத்தை குளிர்விக்கும் வகையில் உள்ளது. இந்த நிலையில், சென்னையிலும் நேற்று கோடை மழை பெய்து சென்னை மக்களின் வெப்பத்தையும் தணித்தது. மேலும், இன்று மழைக்கான வாய்ப்பு எப்படி உள்ளது என்பது குறித்து, சென்னை மண்டல வானிலை ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன்கூறியதாவது:–

‘‘லட்சத்தீவின் கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள மேலடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த 24 மணி நேரத்திற்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். மேலும், தமிழகத்தின் பெரும் பாலான பகுதிகளில் மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது. சென்னையை

பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். அதிகபட்சம் 28 டிகிரி செல்சியஸ் வெப்பமும், குறைந்தபட்சம் 24 டிகிரி வெப்பமும் நிலவும்''என்றுதெரிவித்தார்.

9சென்டிமீட்டர்மழை

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் பெய்தமழையளவுவிவரம்வருமாறு:–

திருப்பூர் மாவட்டம் தர்மபுரம், ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் ஆகிய பகுதிகளில் தலா 9 சென்டி மீட்டர் மழையும், காரைக்கால், ராமநாதபுரம் மாவட்டம் ராம்நாடு ஆகிய இடங்களில் தலா 7 சென்டி மீட்டர் மழையும், புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடியில் 6 சென்டி மீட்டர் மழையும், பாம்பன், தொண்டி, அறந்தாங்கி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தலா 5 சென்டி மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது. ராமநாதபுரம், வேதாரண்யம், திருமயம், அதிராமபட்டினம், செங்கோட்டை, ஆகிய இடங்களில் தலா 4 சென்டி மீட்டர் மழையும், அறிமளம், திருபுவனம், புதுச்சேரி, தர்மபுரி, பரமத்திவேலூர், திருவாரூர், பெருந்துறை, நெல்லை மாவட்டம் பாபநாசம் ஆகிய மாவட்டங்களில் தலா 3 சென்டி மீட்டர் மழையும் பெய்தது.

## <u>கோடை மழையால் துளிர்க்க தொடங்கிய செடிகள்</u>



கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் நடுவில் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்காக குரோட்டன்ஸ் செடிகள் தொட்டிகளில் வைக்கப்பட்டு இருந்தன. கோடை வெயில் காரணமாக அந்த செடிகள்

கருகின. தற்போது கடந்த சில நாட்களாக மழை பெய்ததால் கருகிய செடிகள் மீண்டும் துளிர்க்க தொடங்கி இருப்பதை படத்தில் காணலாம்.

## மசினகுடியில், பெண்களுக்கு இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி



மசினகுடியில் இயற்கை வேளாண்மை குறித்து பெண்களுக்கு 2 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி முகாமிற்கு ஊட்டி சமூக சேவா இயக்குனர் அந்தோணிசாமி, திட்ட அலுவலர் சுப்ரபா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் இயற்கை உரம் தயாரித் தல், வீட்டு தோட்டங்களை உருவாக்குதல் குறித்து பயிற்சி அளிக் கப்பட்டது. இந்த பயிற்சி முகாமில் மசினகுடி பகுதியில் உள்ள சுய உதவி குழுக்களை சேர்ந்த ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு தோட்டக்கலை உதவி வேளாண்மை அலு வலர் அம்பிராஜன் இயற்கை வேளாண்மை குறித்து எடுத்து கூறினார்.

## கல்வராயன்மலை நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை: கோமுகி அணைக்கு வினாடிக்கு 120 கனஅடி தண்ணீர் வந்தது



கல்வராயன்மலை நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்த தொடர் மழை யினால் கோமுகி அணைக்கு வினாடிக்கு 120 கனஅடி தண்ணீர் வருவதால் அணையின் நீர்மட்டம் 27 அடியாக உயர்ந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சிஅடைந்துள்ளனர்.

நீர்மட்டம்

கச்சிராயப்பாளையம் அருகே கோமுகி அணை உள்ளது. 46 அடி நீர்மட்ட கொள்ளளவு கொண்ட இந்த அணைக்கு கல்வராயன்மலை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய் யும் மழை காரணமாக நீரோடைகள் மற்றும் கல்படை, பொட்டியம் ஆறுகள் வழியாக தண்ணீர் வருவது வழக்கம். கடந்த ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதம் பெய்த வடகிழக்கு பருவ மழை காரணமாக 17 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் 44 அடியாக உயர்ந்தது. இதனால் மகிழ்ச்சி அடைந்த கோமுகி அணை பாசன விவசாயிகள் தங்களது விளை நிலங்களை உழவு செய்து நெல், கரும்பு, மஞ்சள் உள் ளிட்ட பயிர்களை பயிரிட்ட னர். அதைத் தொடர்ந்து விவசாய பணிகளுக் காக கடந்த நவம்பர் முதல் ஜனவரி மாதம் வரை 3 மாதங்களுக்கு அணையில் இருந்து பழைய மற்றும் புதிய பாசன வாய்க் கால்கள் வழியாக தண்ணீர் திறந்து விடப்பட்டது. பின்னர் விவசாய பணி மற்றும் மீன் வளர்ப்புக்காக அணையில் 22 அடி தண்ணீர் தேக்கி வைக்கப் பட்டது.

அணைக்குதண்ணீர்வந்தது

இந்த நிலையில் கடந்த 3 நாட்களாக மாலை, இரவு நேரங்களில் கல்வராயன்மலை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த பலத்த மழையினால் நேற்று மாலை 5 மணி நிலவரப்படி வினாடிக்கு பொட்டியம், கல்படை ஆறுகள் வழியாக அணைக்கு 120 கனஅடி தண்ணீர் வந்து கொண் டிருக்கிறது. இதனால், 22 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் 27 அடியாக உயர்ந்துள்ளது. தற்போது 3 நாட்கள் பெய்த மழை காரணமாக அணையின் நீர்மட்டம் உயர்ந்ததால், கோடை காலத்தில் விவசாய பணிக்கும், குடிநீருக்கும் பற் றாக்குறை ஏற்படாது என்று விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.